எனது இலக்கம்: 02/06/04/03 RCT — 2010.11.30

அமைச்சுச் சுற்றுநிருபம் இல.: 05/2010

அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும்
அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும்

## ஆபத்தான வெட்டு மரங்களை நீக்குதல்

மேற்படி விடயம் தொடர்பிலான கமத்தொழில், காணி மற்றும் வன வளங்கள் அமைச்சின் செயலாளரது 1996.01.10 ஆம் திகதிய 01/96 ஆம் இலக்க சுற்றுநிருபம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது என்பதோடு, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இச் சுற்றுநிருபம் வெளியிடப்படுகின்றது.

உயிருக்கும் சொத்துக்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அரச காணிகளில் உள்ள மரங்களை நீக்குதல் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஒரு கடமையாகும். ஆபத்தான நிலையிலுள்ள மரங்களை நீக்குதல் தொடர்பில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் உரிய பிரதேச முகாமையாளருக்கு பதிவுத் தபாலில் எழுத்து மூலம் அறிவித்து 30 நாட்களுக்குள் அத்தகைய மரம்/மரங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் நீக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு கூட்டுத்தாபனம் தவறும் பட்சத்தில், அதாவது 30 நாட்கள் கழிந்ததன் பின்னர் அதைப் பற்றி அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அறிவித்துவிட்டு, நீக்கப்பட வேண்டுமென அடையாளம்காணப்பட்டுள்ள மரத்தை/மரங்களை ஏல விற்பனையில் விற்பதற்கு இத்தால் உங்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. இதன் பொருட்டு பின்வரும் நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

1. குறைந்தபட்ச விலைக் கேள்வியானது தலப் பெறுமதியாகவிருத்தல் வேண்டும்.
2. ஏல விற்பனையை பிரதேச செயலாளர்/உதவிப் பிரதேச செயலாளர் மட்டுமே மேற்கொள்ளுதல் வேண்டும்.
3. ஏல விற்பனைக்கு முன்னர் அது தொடர்பில் போதியளவு பிரச்சாரம் செய்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளதென்பதைப் பற்றி பிரதேச செயலாளர் திருப்தியுறுதல் வேண்டும்.
4. வெட்டு மரங்களை நீக்குவதற்கு முன்னர் நீக்குகின்ற நபர் அல்லது நிறுவனம், நீக்கப்படுகின்ற மரங்களின் வகை மற்றும் அளவு ஆகியன தொடர்பில் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் உரிய வீச்சினை வன அலுவலகத்திற்கும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகத்திற்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும்.
5. வெட்டு மரங்கள் நீக்கப்படுகின்ற போது அதற்கென தற்போதுள்ள விதிமுறையின் பிரகாரம் வெட்டு மரங்களை ஏற்றிச் செல்வதற்கான உரிமப் பத்திரம் பெறப்படுதல் வேண்டும்.
6. இச்சுற்றுநிருபமானது அரச காணிகளிலுள்ள ஆபத்தான மரங்களை நீக்குவதற்கு மட்டுமே வெளியிடப்படுகின்றது.
7. இது தொடர்பாக மேலதிக விபரங்களைப் பெறுவதற்கு அவசியமாயின் பணிப்பாளரை (இயற்கை வளங்கள்) தொடர்பு கொள்ளவும். – தொலைபேசி இலக்கம் 011-2877287.

ஆர்.எச்.எஸ்.சமரதுங்க
செயலாளர்
சுற்றாடல் அமைச்சு

பிரதிகள்:
1. செயலாளர்
   அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு — அறியும் பொருட்டும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்
2. காடு பேணலதிபர்
   வன பாதுகாப்புத் திணைக்களம் — அறியும் பொருட்டு
3. தலைவர்
   அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் — அறியும் பொருட்டும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்